# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC No.580/2024 | Date: 13.11.2025 |
| Deposition of Witness for | : | பு.சா.1 | |
| Name | : | **ஜெயஸ்ரீ** | |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**குறுக்கு விசாரணை :-**

1) இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் JKB Textiles என்ற பெயரில் தொழில் செய்து வருகிறேன். வேறு ஏதேனும் தொழில் செய்து வருகிறேனோ என்றால் முன்பு டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வந்தேன், தற்போது இல்லை. நான் JKB Textiles என்ற நிறுவனத்தை எந்த வருடம் தொடங்கினேன் என்றால் 2020 ம் வருடம் தொடங்கினேன். மேற்படி, நிறுவனத்தை பதிவு செய்துள்ளேனா என்றால் பதிவு செய்துள்ளேன். அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எதிரியும், எதிரியின் தந்தையும், எனது கணவரும் ஒரே துறையில் பணிபுரிந்தனர், அதனால் எனக்கு எதிரியை 07 வருடங்களாக தெரியும். எனது மாத வருமானம் என்ன என்றால் ரூ.1,50,000/-ம் முதல் ரூ.2,50,000/-ம் வரை ஆகும். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தவிர என்னிடம் இந்த வழக்கு சம்பந்தமாக வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் கடனுறுதி சீட்டு ஒன்றும், ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாள் உள்ளது.

3) எதிரிக்கு கொடுத்தாக சொல்லப்படும் ரூ.8 லட்சம் தொகையை ரொக்கமாக கொடுத்தேனா அல்லது வங்கி பரிவர்த்தனை மூலமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாக எனது வீட்டில் வைத்து கொடுத்தேன்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Jayasri